2002 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. சி. சண்முகம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

10—

வேலை வாய்ப்பு

***3350—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட பட்டாபிராம், பூவிருந்தவல்லி பேரூராட்சிப் பகுதியைச் சேர்ந்த சென்னீர்குப்பத்திலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது சம்பந்தமாக திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்பு அளிக்க பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களின்கீழ் பயனடைய திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிக்குட்பட்ட பட்டாபிராம், பூந்தமல்லி பேரூராட்சிப் பகுதியைச் சேர்ந்த சென்னீர்குப்பத்திலுள்ள ஊனமுற்றவர்களும், திருவள்ளூர் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரை அணுகினால் தகுதிக்கேற்ப பயன் பெறலாம்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்கள் பலர் படித்துவிட்டும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டும் காத்திருப்பவர்கள் எத்தனை பேர் என்றும், அரசாங்க வேலையில் இதுவரை எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்றும் அறிய விரும்புகிறேன். படிக்காதவர்கள் வேலை பெற முடியாமல் சுய தொழில் செய்ய, அவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி தேவை என்றும் கேட்டிருக்கிறார்கள். மேலும், ஊனமுற்றவர்கள் சிலர் திருமணம் ஆகாமலும், திருமணம் ஆனவர்கள் மனைவி, குழந்தை குட்டிகளுடன்

கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசு அறிந்து, அவர்களுக்கு விடிவுகாலம் ஏற்படுத்த முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோரை மிகவும் பரிவோடும் பாசத்தோடும் கவனித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு ஆளுநர் உரையிலே ஊனமுற்றவர்களை மனவளர்ச்சி குன்றியவர்களை கருணை அடிப்படையிலே கவனிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இதுவரை நம்முடைய தமிழ்நாட்டில் 10 இலட்சம் பேர் ஊனமுற்றவர்கள் இருப்பதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், கிராமங்களிலே இருப்பவர்கள் பதிவு செய்யாதவர்களைக்கூட மாவட்ட அளவிலே கருத்தரங்குகள் மூலமாக அவர்களுக்கு நோட்டீஸ் விநியோகம் செய்து கலந்துகொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்து, அதன் மூலமும் கண்டறியச் செய்வதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. அரசுப் பணிகளில் 'சி' மற்றும் 'டி' பிரிவுகளில் தகுதி வாய்ந்த உடல் ஊனமுற்றோருக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளித்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு 18 வயது முதல் 55 வயதிற்குட்பட்ட உடல் ஊனமுற்றோருக்கு ரூபாய் 2,000 அல்லது மூன்றில் ஒரு பங்கு அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் ஆயிரம் பேருக்கு வழங்கப்படுகிறது. இதுதவிர, பெட்டிக் கடை அமைப்பதற்கு 5,000 ரூபாய் அல்லது மூன்றில் ஒரு பங்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் ஆண்டுதோறும் மாநிலம் முழுவதும் 500 பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TRUTH ALONE TRIUMPHS